**செய்தி வெளியீடு எண்: 577** **நாள்: 26.08.2018**

## செய்தி வெளியீடு

### பெப்சி – எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளம் திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை (26.8.2018)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி,

தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்
சம்மேளனத்தின் (FEFSI) சார்பில்
பையனூரில் திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட
எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தை
திறந்து வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்களே!

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன்அவர்களே!

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்
திரு. பா.பென்ஜமின் அவர்களே,

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத்துறை அமைச்சர் திரு.கே.பாண்டியராஜன் அவர்களே,
மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்
திரு. கடம்பூர் ராஜூ அவர்களே!

இவ்விழாவிற்கு தலைமையேற்றுள்ள
சம்மேளனத் தலைவர்
மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய
திரு. ஆர்.கே.செல்வமணி அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று நல்ல பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்ற திரைப்பட இயக்குநர் திரு.பாரதிராஜா அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் நடிகர் திரு. விஷால் அவர்களே!
நடிகர் சங்கத்தினுடைய தலைவர் திரு. நாசர் அவர்களே!
திரு. சுரேஷ் அவர்களே!
திரைப்பட நடிகர் திரு.கார்த்திக் அவர்களே!
திரைப்பட நடிகர் திரு.விஜய் சேதுபதி அவர்களே!
திரைப்பட நடிகர் திரு. சிவ கார்த்திகேயன் அவர்களே!
திரைப்பட நடிகர் தாணு அவர்களே!
திரு.தீனா அவர்களே!
திரு.பி.வாசு அவர்களே,
திரு விக்ரமன் அவர்களே!
திரு.கதிரேசன் அவர்களே!
திரு. பன்னீர்செல்வம் அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய சம்மேளனத்தின்
பொதுச் செயலாளர்
திரு. அங்கமுத்து சண்முகம் அவர்களே!

இங்கே வாழ்த்துரை வழங்கிய
திரைப்பட தயாரிப்பாளர்களே,
திரைப்பட இயக்குநர்களே,
இசையமைப்பாளர்களே,
ஒளிப்பதிவாளர்களே,
திரையரங்க உரிமையாளர்களே,

நன்றியுரை ஆற்றவுள்ள சம்மேளன பொருளாளர்
திரு. பி.என்.சுவாமிநாதன் அவர்களே,
சின்னத்திரை மற்றும்
திரைப்படத் துறைகளின் தொழிலாளர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரி மரகதம் குமரவேல் அவர்களே!

சட்டப் பேரவை உறுப்பினர் திரு.பழனி அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்களே!

கழகத்தில் பல்வேறு பொறுப்புக்களில் இருக்கின்ற நிர்வாகிகளே,

மேலும் இங்கு வருகை தந்துள்ள கழக நிர்வாகிகளே,
உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் முன்னாள் பிரதிநிதிகளே,
கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகளே,
ஊடகத் துறை நண்பர்களே,
பெரியோர்களே, தாய்மார்களே,
திரைப்படத் துறையில் இருக்கின்ற பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த நிர்வாகிகளே, அங்கத்தினர்களே,
அனைவருக்கும் என் வணக்கத்தை
தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதன் நாகரிகமடைந்து உருவாக்கிய படைப்புகளில் சினிமா மிகவும் முக்கியமான இடத்தை பெற்றுள்ளது. உலகில் நெடுந்தூரம் சென்று காண முடியாத அற்புதங்களை அமர்ந்த இடத்திலிருந்து காண திரைப்படம் வழி வகுத்துள்ளது.

சினிமாவிற்கு முதலில் வடிவம் கொடுத்தவர்கள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த
லூமியர் சகோதரர்கள் என்றாலும்,

இந்தியாவில் முதன் முதலில்
பேசாப் படத்தை தயாரித்து வெளியிட்ட பெருமை
இந்திய சினிமாவின் தந்தை என அழைக்கப்படும்
தாதா சாகிப் பால்கே அவர்களையே சாரும்.

இவர் தயாரித்த – ராஜா அரிச்சந்திரா – படம்
1913 ஆம் ஆண்டு வெளிவந்தது.

தமிழில் 1931 ஆம் ஆண்டு
முதல் பேசும் படமாக காளிதாஸ்
திரைப்படம் திரையிடப்பட்டது.

ஊமைப் படங்களாகவும், பேசும் படங்களாகவும்,
பின்னர் வண்ணப் படங்களாகவும்
பரிணாம வளர்ச்சி பெற்று,
இன்று பலர் வியக்கும் அளவுக்கு
சினிமாத் துறை வளர்ந்துள்ளது.

1931 ஆம் ஆண்டுகளில்
பேசும் படங்கள் வெளிவந்தாலும்,
1950 மற்றும் 1960ஆம் ஆண்டு காலகட்டம் தான்
இந்திய சினிமாத் துறைக்கு மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

இந்தக் காலத்தை இந்திய சினிமா உலகத்தின் பொற்காலம் என்றே அழைத்தனர்.

அந்த சமயத்தில்தான் மக்கள் திலகம்
புரட்சித் தலைவர் எம்.ஜி,ஆர் அவர்கள்
நடித்த படங்கள் அதிக அளவில் வெளிவந்து,
அவர் மிகப் பெரிய நடிகராக புகழ் பெற்று
தமிழக மக்களின் மனதில் நீங்கா இடத்தை  பெற்றார்.

புராண இதிகாச படங்கள் வெளிவந்து
கொண்டிருந்த காலகட்டத்தில்
சமுதாய படங்கள் வெளிவர காரணமாக இருந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜிஆர். அவர்கள்.

தன் திரைப்படங்கள் மூலம் சமுதாய மறுமலர்ச்சியை உண்டாக்கும் விதத்தில் கதை அமைப்பையும்,
திரைப்படப் பாடல்களையும் உருவாக்கிய பெருமை
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையே சாரும்.

எம்.ஜி.ஆர். அவர்கள் புரட்சித் தலைவராக
உயர்வதற்கு அடிப்படை காரணமாக இருந்தது
அவர் ஒரு புரட்சி நடிகர் என்பதால்தான்.
“நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே
நம் நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளே”
போன்ற பாடல்கள் மூலம்
ஒரு ஆசிரியராக மாணவர்களுக்கு
அறிவுரை கூறியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

“கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த
தொழிலாளி விவசாயி”
என்ற பாடல் மூலம் விவசாயிகளின் முக்கியத்துவத்தை நாட்டுக்கு உணர்த்தியவர்
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்கள்.

“இருப்பதைக் கொண்டு சிறப்புடன்
வாழும் இலக்கணம் படைத்தவன் தொழிலாளி”
என்ற பாடல் மூலம் தொழிலாளர்கள் நிலை பற்றியும்,

“நாளை உலகை ஆள வேண்டும் உழைக்கும் கரங்களே!
இந்த நாடு முழுவதும் மலர வேண்டும் புரட்சி மலர்களே!”
என்ற பாடல் மூலம் தொழிலாளர்களின் உரிமை
மற்றும் சிறப்புகள் பற்றியும்,

“புத்தன், ஏசு, காந்தி பிறந்தது பூமியில்
எதற்காக, தோழா ஏழை நமக்காக”
என்ற பாடல் மூலம்  நாட்டுக்கு கிடைத்த
நல்ல தலைவர்களை பற்றியும்,
“தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை
கண்ணீரில் மிதக்க வைத்தான்”
என்ற பாடல் மூலம் மீனவர்களின் வாழ்க்கை நிலையையும்,

“ஒன்றே குலம் என்று பாடுவோம்
ஒருவனே தேவன் என்று போற்றுவோம்”
என்ற பாடல் மூலம் தனக்கிருந்த
மதச்சார்ப்பின்மை கொள்கையை பற்றி –
திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்கு முன்பும், பின்பும் இதுவரை யாரும் கூறவில்லை.

இதுபோன்ற   சமுதாய கருத்துகள் நிறைந்த
பாடல்கள் மூலம், திரைப்படத் துறை
ஒரு பொழுதுபோக்கு சாதனம் என்பதை மாற்றி, திரைப்படங்களின்  மூலம் சமுதாயத்தில்
மாற்றத்தை  உண்டாக்க இயலும் என்பதை நிரூபித்துக் காட்டியவர்
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

சமூக கருத்துகளை, மக்களிடையே எடுத்துச் சென்றதில் திரைப்படங்களுக்கு முக்கிய
பங்கு  உண்டு.
அரசியலில்,  திரைப்படத் துறையினரின்
ஆதிக்கத்தினை நிலை நிறுத்தியவர்கள்

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும்தான்
என்று சொன்னால் அது மிகையாகாது.

திரைப்படத்தை மக்களின் ரசனைக்கேற்ப
இயக்கும் இயக்குநர்கள்,

வெளி நாடுகள் மற்றும் உள்நாடுகளில் உள்ள
இயற்கை எழில் கொஞ்சும் இடங்களை
மக்கள் கண் முன் கொண்டுவந்து நிறுத்தும் ஒளிப்பதிவாளர்கள்,

மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் கருத்துகளை
கொண்டு செல்லும் கவிஞர்கள் மற்றும் வசனகர்த்தாக்கள்,

பொட்டல் காட்டை மாளிகைகளாக
உருவாக்கும் கலை இயக்குநர்கள்,

பலவிதமான உருவத் தோற்றங்களை மாற்றி உருவாக்கும் அற்புதமான திறமை கொண்ட
ஒப்பனைக் கலைஞர்கள்,
உடையலங்கார கலைஞர்கள்,
சரித்திரப் புகழ் பெற்ற மாவீரர்களை போல ஆற்றல் கொண்ட சண்டைப் பயிற்சி இயக்குநர்கள்,
சண்டைப் பயிற்சி கலைஞர்கள்,

மக்களை வியக்க வைத்த
நடன இயக்குநர்கள், நடன கலைஞர்கள்
என திரைத் துறையைச் சார்ந்த பல்வேறு
கலைஞர்கள் மற்றும் இவர்கள்அனைவருடனும் தோளோடு தோள் கொடுத்து உழைக்கும்
திரைப்படத் துறை தொழிலாளர்கள் தங்களது உரிமைகளை பாதுகாக்க ஒவ்வொரு துறைக்கும்
ஒரு சங்கங்கள் அமைத்தனர்.

அந்த வகையில் அமைக்கப்பட்ட 22 சங்கங்கள் இணைந்த ஒரு கூட்டமைப்புதான்
தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம்.
அதாவது ‘பெப்சி’ (FEFSI) என்ற இந்த அமைப்பு ஆகும்.

திரைப்படத் தொழிலாளர்கள் நலனுக்கான
இந்த அமைப்பு 1967ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

திரைப்படம் மற்றும் அரசியல் என்ற இரண்டையும்
தனது இரண்டு கண்களாக பாவித்த
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்
இந்த அமைப்பை உருவாக்குவதற்கு
உறுதுணையாக இருந்திருக்கிறார் என்பதை
அறிவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

“கடமை செய்வோம் கலங்காமலே
உரிமை கேட்போம் தயங்காமலே
வாருங்கள் தோழர்களே!
ஒன்றாய் சேருங்கள் தோழர்களே!”
என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடலுக்கேற்ப,

இந்த அமைப்பு திரைப்படத் துறையினர் சந்திக்கும் அன்றாடப் பிரச்சனைகள் குறித்தும், அவர்களுக்கு கிடைக்கப் பெறவேண்டிய உரிய ஊதியம் குறித்தும்,

அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய
நியாயமான உரிமைகள் குறித்தும்
சம்பந்தப்பட்ட நிர்வாகிகளிடம்
பேசி பெற்றுத் தருதல்,
மத்திய மாநில அரசுகள் மூலம்
அவர்களுக்கு கிடைக்க வேண்டிய –
கல்வி உதவி, மருத்துவ உதவி,
வீடு கட்ட உதவி போன்ற நலத் திட்டங்களை
பெற்றுத் தருதல் போன்ற நடவடிக்கைகள் மூலம்
தொழிலாளர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்திட இந்த சம்மேளனம் செய்யும் முயற்சிகளை அறிந்து
நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரைப்படத் துறையில் ஆரம்ப காலத்தில்
படப்பிடிப்பு நிலையங்கள் மற்றும் தளங்கள்
அதிக அளவில் இருந்தது தமிழ்நாட்டில் தான்.

முதலில் இந்தி மொழி உள்பட அனைத்து மொழி திரைப்படங்களும் சென்னையில் உருவாக்கப்பட்டன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, வங்காளம், போஜ்பூரி, துளு, பஞ்சாபி என இந்தியாவின் அனைத்து மொழிப் படங்களிலும் இந்த அமைப்பின் தொழிலாளர்கள் பங்கு பெற்று சாதனை படைத்து வருகிறார்கள் என்பது போற்றுதலுக்குரியதாகும்.

தற்பொழுதைய காலமாற்றத்திற்கேற்ப,
படப்பிடிப்பு நிலையங்களின் எண்ணிக்கை
தமிழகத்தில் வெகுவாக குறைந்து விட்டது.

படப்பிடிப்பு தளங்கள் இருந்த இடங்கள்.
தற்பொழுது குடியிருப்புகள் மற்றும்
வணிக வளாகங்களாக மாறி வருகின்றன.

இந்த சூழ்நிலையில் திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் இணைந்து, சினிமாத் துறையின் மூலம் சமுதாய நலன் சார்ந்த கருத்துகளை மக்களிடையே விதைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்த முடியும் என்று சாதித்துக் காட்டிய மாண்புமிகு

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரால் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளம் உருவாக்கி இருப்பது பாராட்டுக்குரிய செயலாகும்.

மேலும் FEFSI என்ற அமைப்பு உருவாக
உறுதுணையாக இருந்த
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களது பெயரை தங்களது முதல் படப்பிடிப்பு தளத்திற்கு வைத்தது,
இந்த அமைப்பினர் அவருக்கு தங்கள் நன்றியை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

110 அடி நீளமும் 100 அடி அகலமும் 56 அடி உயரமும் கொண்ட இந்த படப்பிடிப்புத் தளம் இந்தியாவிலேயே
மிக உயர்ந்த படப்பிடிப்பு தளம் என்று அறிவதில்
நான் பெருமிதம் கொள்கிறேன்.

மேலும் யாரிடமும் கடன் பெறாமல்
சம்மேளனத்தின் கலை நிகழ்ச்சியின் மூலமும், இணைக்கப்பட்ட சங்கங்களின் இருந்து பெறப்பட்ட நன்கொடையின் மூலமும் இத்தனை அழகுமிக்க படப்பிடிப்பு தளத்தை உருவாக்கி சாதனை படைத்துள்ளது பெப்சி அமைப்பு.

இந்த சாதனையை படைத்த இந்த அமைப்பினைச் சார்ந்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள்.

சென்னையின் பிற இடங்களிலும்,
தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும்
இப்படிப்பட்ட படப்பிடிப்பு தளங்களை இந்த அமைப்பு உருவாக்க வேண்டும் என இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதிக அளவில் படப்பிடிப்பு தளங்கள் உருவாக்கப்படுவதன் மூலம் தமிழ் படத் தயாரிப்பாளர்கள் வெளியிடங்களுக்குச் செல்லாமல் உள்ளூரிலேயே படப்பிடிப்பு நடத்த வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் அவர்கள் தயாரிக்கும் படங்களுக்கான செலவுகள் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது.

மேலும் இதர மொழிப் படங்களும்
இங்குள்ள படப்பிடிப்பு தளங்களில் பயன்படுத்திக் கொள்ள முன்வரும் வாய்ப்பு உருவாகும்.
இதன் மூலம் இங்குள்ள தமிழ் திரைப்படத் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுவது உறுதிப்படுத்தப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் திரைப்படத் துறைக்கும் தனக்கும் உள்ள தொடர்பை பற்றிக் குறிப்பிடும்போது,

‘‘எப்பொழுதெல்லாம் நான் முதலமைச்சராக பொறுப்பேற்கிறேனோ, அப்போதெல்லாம் தமிழ்த் திரைப்படத் துறைக்கு தேவையான அனைத்து ஊக்கத்தையும் , உதவியையும், ஆதரவையும் அளித்து வருகிறேன்’’ என்று கூறினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவந்த அம்மாவின் அரசும் தமிழ் திரையுலகத்தை ஊக்கப்படுத்தியும், வழிகாட்டியும் வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள்
திரைப்படத் துறைக்கு ஏராளமான திட்டங்களை
வழங்கி செயல்படுத்தியுள்ளார்கள். அவைகளை முழுமையாக இங்கே குறிப்பிட நேரமில்லை என்பதால் சிலவற்றை மட்டும் இங்கே தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

- மாண்புமிகு அம்மா அவர்கள் ‘பெப்சி’ அமைப்பின் அலுவலகத்திற்காக சென்னை 100 அடி சாலையில் இடம் வழங்கினார்கள். இந்த இடத்தில்தான் தற்போது FEFSI அலுவலகம் இயங்கி வருகிறது என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

- குறைந்த முதலீட்டில் திரைப்படம் எடுக்கும் சிறு தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அந்த திரைப்படத்திற்கான மானியத் தொகையையும், திரைப்படங்களின் எண்ணிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்த்தினார்கள் என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

- ஒற்றைச் சாளர முறையில் படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்கும் முறை மாண்புமிகு அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

- திரைப்படத் தொழிலாளர்கள் பணிபுரியும்போது உயிரிழந்தாலோ, ஊனமுற்றாலோ அவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் அம்மா அவர்கள் ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது.

- மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பெயரில் விருது, பெண்களை உயர்வாக சித்தரிக்கும் திரைப்படத்திற்கு அரசு விருது, சிறந்த

திரைப்பட ஒப்பனைக் கலைஞர் விருது, சிறந்த தையல் கலைஞர் விருது, பின்னணிக் குரல் கொடுப்பவர்களுக்கு விருது, சிறந்த நகைச்சுவை நடிகர் மற்றும் நடிகையர், குணச்சித்திர நடிகர் மற்றும் நடிகையர் ஆகியோருக்கு புதிய விருதுகள் ஆகியவை மாண்புமிகு அம்மா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டன.

- சட்டத்திற்கு புறம்பாக திருட்டு வீடியோக்கள் எடுக்கப்படுவதை தடுக்கும் வகையில் காணொலி திருட்டு தடுப்பு பிரிவு எனும் ஒரு தனிப் பிரிவு காவல் துறையில் உருவாக்கப்பட்டுள்ளது. திருட்டு வீடியோ தொழிலில் ஈடுபட்டு குற்றம் இழைப்போரை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வழிவகை செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள். மரியாதைக்குரிய சகோதரர் குறிப்பிடுகின்றபொழுது இங்கே தெரிவித்தார், திருட்டு விசிடி அதிக அளவிலே இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, அதை தடுப்பதற்குத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே, இதற்கு கடுமையான சட்டம் வேண்டும் என்று குண்டர் சட்டம் அம்மாவினுடைய ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

- மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்டுதோறும் சென்னையில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவிற்கு 50 லட்சம் ரூபாய் மானியம் அளித்தார்கள். அதை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

இதுபோன்று எண்ணற்ற சலுகைகளை
மாண்புமிகு அம்மா அவர்கள்
திரைப்படத் துறைக்கு வழங்கினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களிடம்
திரைப்படத் துறையினர் வைத்த பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.
அதே நிலையில் தான் அம்மாவின் வழியில்,

அம்மாவின் அரசும் திரைப்படத் துறைக்கு
பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி வருகிறது.

இருப்பினும், திரைப்படத் துறையினரே,

தங்களுக்குள் இருக்கின்ற ஒற்றுமையை
நிரூபிக்கும் வகையில், இந்த படிப்பிடிப்பு தளங்களைக் கொண்டு பல்வேறு திட்டங்களையும்
தங்களுக்குள் செயல்படுத்தி வருகிறார்கள்.

அவர்களுடைய ஒற்றுமையும், விடாமுயற்சியும்
நிச்சயம் வெற்றியைத்தான் தரும்.

‘‘வெற்றி பெறுவதற்கு தேவையானது –
முடிவில்லா விடா முயற்சியும்,
அதீதமான நம்பிக்கையும்தான்,’’ என்று
சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

உங்கள் அமைப்பின் விடா முயற்சியினால்தான்
இன்று இவ்வளவு பெரிய படப்பிடிப்பு தளத்தினை அமைக்க முடிந்தது.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமையே உயர்வு தரும்
என்பது ஆன்றோர் வாக்கு.

பல சங்கங்கள் ஒற்றுமையாக இணைந்து உருவாக்கியதுதான் இந்த அமைப்பு.
ஒற்றுமையின் உணர்வுக்கு உங்கள் அமைப்பே
ஒரு எடுத்துக்காட்டாகும்.
உங்கள் அமைப்பில் உள்ள சங்கங்களின்
ஒற்றுமை மற்றும் கூட்டு முயற்சியின்
காரணமாகத்தான் இன்று இந்தியாவிலேயே
மிக உயர்ந்த எம்.ஜி.ஆர்.நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தினை வெளியிலிருந்து எந்த உதவியும் பெறமாமல்,
உங்களது கூட்டு முயற்சியின் விளைவாக
உருவாக்கி இருக்கிறீர்கள் என்பதை அறிவதில்
நான் மட்டமற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

உங்கள் அமைப்பில் உள்ள அனைவரது
ஒருங்கிணைந்த ஒற்றுமையின் முயற்சியின்
காரணமாக, இந்த சிறப்பான படப்பிடிப்பு தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒற்றுமையின் உயர்வு பற்றி இங்கு கூறுகையில்
எனக்கு ஒரு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு சிறு கிராமம்.

அங்கு வாழும் மக்களின் எண்ணிக்கை குறைவு.
இக்கிராமத்தில் மரங்களும் குறைவாக இருந்தன. எனவே சமைப்பதற்கு தேவையான விறகை கூட,
மக்கள் வெளி ஊரிலிருந்து அதிக விலைக்கு
வாங்க வேண்டியிருந்தது.

ஒரு சமயம் அதிக மழை பொழிந்ததால்,
விறகு விற்பதற்கு பக்கத்து ஊர்களிலிருந்து
எந்த வியாபாரியும் வரவில்லை. இதனால்
சமையல் செய்வதற்கே சிரமம் அந்தப் பகுதியில் ஏற்பட்டது.

அந்த கிராமத்தில், ஒரு வீட்டில் இரண்டு சிறுவர்கள் இருந்தனர். அவர்கள் தங்களது தாயின் கட்டளைப்படி, தங்களுக்கு சொந்தமான தோட்டத்திலிருந்து
மழை மற்றும் காற்றினால், கீழே விழுந்திருக்கும் காய்ந்துபோன மரக்கிளைகளை கொண்டு வரச் சென்றனர்.

அவர்கள் தோட்டத்திற்கு சென்று பார்த்தபோது மழையினால் பெரிய மரக்கிளைகள் விழுந்து இருந்தன. ஆனால் அவர்கள் இருவரால் அந்த மரக்கிளைகளை தூக்க முடியவில்லை.

அப்பொழுது இறந்துப்போன ஒரு பெரிய புழுவை
பல எறும்புகள் சேர்ந்து ஒன்றாக இழுத்துச் செல்வதை பார்த்தனர்.

‘‘இவ்வளவு சிறிய எறும்புகள் ஒரு புழுவை
எப்படி இழுத்துச் செல்கின்றன **?**’’
என சிறியவன் கேட்டான்.

அதற்கு பெரியவன்,
‘‘நிறைய எறும்புகள் ஒன்று சேர்ந்துவிட்டால்
ஒரு செத்த பாம்பைச் கூட இழுத்துச் செல்ல முடியும்’’ என்று கூறினான்.
எறும்புகள் புழுவை மெல்ல மெல்ல இழுத்துச் செல்கையில், புழு அடிக்கடி உருண்டு விழுந்தது.

சிற்சில சமயங்களில் சில எறும்புகள்
அதன் அடியில் மாட்டிக் கொண்டது.
ஆனால் மற்ற எறும்புகள்அந்த புழுவை அசைத்து, அடியில் மாட்டிக் கொண்ட எறும்புகளை காப்பாற்றியது.

அந்த எறும்புகள் களைப்பு என்பதையே அறியவில்லை. அந்த சிறுவர்கள் பார்த்துக் கொண்டிருந்தபோதே அந்த புழுவை வெகுதூரத்திற்கு இழுத்து சென்று விட்டன.

உடனே அந்த சிறுவர்களுக்கு உற்சாகம் பிறந்தது.
‘‘அண்ணா, நாம் இந்த எறும்பைவிடக் கீழானவர்களா ?
நீ போய் உன் நண்பர்களை அழைத்து வா.
நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த மரக்கிளையை நமது வீட்டிற்கு எடுத்துச் சொல்வோம்’’
என்று சிறியவன் கூறினான்.

அதன்படி அவர்கள் அனைவரும் சேர்ந்து மரக்கிளையினை தங்களது வீட்டிற்கு கொண்டு சென்றனர்.

வீட்டிற்கு சென்றவுடன் அந்த சிறுவர்கள் தங்கள் தாயாரிடம் நடந்ததை கூறினர்.
அப்பொழுது அவர்களின் தாயார் ஒற்றுமையின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

‘‘ஒற்றுமையில் மிகுந்த வலிமை உண்டு.
நீங்கள் ஒன்று சேர்ந்தால் கடுமையான வேலையாக இருந்தால் கூட செய்ய முடியும்.

உங்களுக்குள் ஒற்றுமை இருந்தால்,
உங்கள் மனதும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கும், உங்கள் வேலையை சுலபமாக முடிக்க முடியும்.

ஆதலால் ஒற்றுமையில்தான் பலமிருக்குது
என உணருங்கள். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு’’ என்றார் அந்த தாயார்.

மேலும், சிறுவர்களின் தாயார்,
அப்பெரிய மரக்கிளையினை தோட்டத்திலிருந்து
வீட்டிற்கு கொண்டு வர உதவி செய்த
சிறுவர்களின் வீட்டிற்கும்,
மரக்கிளையினை பிரித்து கொடுத்து அனைவரது
வீட்டிலும் சமையல் செய்வதற்கு உதவினார்.

எனவே, பெப்சி அமைப்பைச் சார்ந்த
நீங்கள் அனைவரும் விடாமுயற்சியால்
வெற்றி பெற்று உள்ளீர்கள் என்பதை உணர்ந்து
உங்கள் அனைவரையும் மனதார பாராட்டி வாழ்த்துகிறேன்.

இந்த நன்னாளில் தமிழ் திரையுலகம்
மேன்மேலும் வளர்ச்சி பெறவேண்டும்,

திரைப்படத் தொழிலாளர்கள்

எல்லா நலமும், வளமும் பெற்று
மகிழ்ச்சியோடு வாழவேண்டும்
என மனதார வாழ்த்துகின்றேன்.

விரைவில் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நடைபெறும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், மேடையிலே பேசியவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கு வைத்தார்கள். இன்றைக்கு பல தொழிலாளர்கள் வீடு இல்லாமல் இருக்கின்றார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், குடிசையில்லா வீடு உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டம் தீட்டினார்கள், அந்தத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது. பல இலட்சம் வீடுகளை கட்டித் தருவதற்கு இந்தஅரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் என்னிடத்திலே தெரிவித்திருக்கின்றார்கள், அவர்களுக்கு எப்படி வீடு கட்டிக் கொடுக்க வேண்டும், எவ்வாறு உதவி செய்ய முடியும் என்பதையெல்லாம் பரிசீலித்துக் உங்களுடைய தொழிலாளர்களுக்கும் சட்டப்படி, விரைவாக, உங்களுடைய எண்ணப்படி அம்மாவினுடைய அரசு உங்களுக்கு உதவி புரியும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். உடைய நூற்றாண்டு விழாவை அரசின் சார்பாக எல்லா மாவட்ட தலைநகரிலும் நாம் நடத்தியிருக்கின்றோம். இதுவரை அரசின் சார்பாக,
30 மாவட்டங்களில் அறிவித்து, அந்த அறிவிப்பின்படி
30 மாவட்டங்களுக்கு சென்று, அந்த மாவட்ட மக்களை சந்தித்து, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் என்ன என்பதையறிந்து, அதற்கான அறிவிப்புகளை வழங்கியிருக்கிறோம். அந்த அறிவிப்பின்படி, இன்றைக்கு ஒவ்வொரு திட்டமாக நாங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

அந்த அறிவிப்பிலே, இன்று கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக சிறையிலே இருந்த சிறைவாசிகள் நீதிமன்றத்தினுடைய சட்டதிட்டத்திற்குட்பட்டு யார், யார் வருகின்றார்களோ, அவர்களெல்லாம் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அறிவிப்பை தந்து, அந்த அறிவிப்பின் கீழ் இதுவரை சுமார் 600 நபர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கிட்டத்தட்ட இன்னும் 1000 நபர்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கும் பரிசீலித்து, படிப்படியாக விடுதலை செய்வதற்கு அம்மாவினுடைய

அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எங்கள் இயக்கத்தின் ஆணிவேராக வாழ்ந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களும் திரைத் துறையை சேர்ந்தவர்கள்தான் என்பதை என்றும் மனதில் வைத்திருக்கின்றோம். இருபெரும் தலைவர்கள் சுமார் **26** ஆண்டுகாலம் தமிழகத்திலே ஆட்சி அதிகாரத்தில் இருந்து பல்வேறு திட்டங்களை வழங்கியிருக்கின்றார்கள், திரைப்படத் துறையினருக்கும் வழங்கியிருக்கின்றார்கள், பொதுமக்களுக்கும் வழங்கியிருக்கின்றார்கள்.
ஆகவே, அவர்கள் மறைந்தாலும் அவர்களுடைய திட்டங்கள் அனைத்தையும், அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு கோரிக்கை வைத்தீர்கள். அதையெல்லாம், அம்மாவினுடைய அரசு கனிவோடு பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.ஆர்.கே.செல்வமணி அவர்கள் பேசியபொழுது, இந்கே இருக்கின்ற **23** சங்கங்களில் உள்ள நிர்வாகிகளுக்கு என்னென்ன பிரச்சினை இருக்கிறது என்பதை முழுமையாக கூறியிருக்கிறார்.
இது திரைப்பட குடும்பம், திரைப்பட குடும்பம் நடத்துகின்ற விழா, இங்கே தயாரிப்பாளர்கள் இருக்கின்றார்கள், இயக்குநர்கள் இருக்கின்றார்கள், நடிகர்கள் இருக்கின்றார்கள், உருவாக்குகின்ற களத்தில் திரைப்படத் தொழிலாளர்கள் அமர்ந்திருக்கின்றீர்கள், ஒட்டுமொத்த திரைக் குடும்பமே இங்கு அமர்ந்திருக்கின்றது. முதன்முதலாக திரைப்படத் துறையினர் நடத்துகின்ற முதல் விழா, இந்த விழாவில் நான் கலந்து கொண்டிருக்கின்றேன். எனக்கு முன்னாலே, சம்மேளனத் தலைவர் திரு.ஆர்.கே.செல்வமணி அவர்கள் அவர் திடீரென்று அழைப்பிதழ் அளிக்க வருவதாகச் சொன்னார், வாருங்கள் என்று சொல்லிவிட்டேன். நான் வீட்டிலே அமர்ந்திருந்தபொழுது, இந்த அழைப்பிதழைக் கொடுத்தார், நான் எப்படி உடை அணிகிறேன் என்று சுட்டிக் காட்டினார். நானெல்லாம் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன், மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்களும் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். ஆகவே, கஷ்டம் என்றால் என்ன என்பது நன்றாகத் தெரியும், உழைக்கின்றவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் என்பதை நன்றாகப் புரிந்தவர்கள். அரசியலில் வருவதற்கு பல்வேறு வழிகள் இருக்கின்றன. ஆனால் உங்களைப் போல் உழைத்து இந்த நிலைக்கு வந்தோம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, உழைக்கின்ற பொழுதுதான் அந்தக் கஷ்டம், வலி தெரியும். இந்த **23** அமைப்புகளும் எப்படி கஷ்டப்படுகின்றீர்கள், எப்படி வலி தாங்கிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதையெல்லாம் உங்கள் சம்மேளனத் தலைவர் அழகாக கோடிட்டுக் காட்டினார்கள்.அத்தனையையும் உணர்ந்தவர்கள் நாங்கள், உங்களோடு இருந்து பழகியவர்கள், உழைப்பில் இருந்து நாங்கள் வளர்ந்தவர்கள். ஆகவே,

உழைப்பிற்கு என்றைக்கும் முன்னுரிமை வழங்குகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

பக்கத்திலே ஒரு அரங்கம் கட்டித் தரவேண்டும் என்று ஒரு கோரிக்கையும் வைத்தார்கள். இங்கே பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவருடைய நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தை துவக்கி வைக்க வேண்டும் என்றுதான் நான் இங்கே நுழைந்தேன். அதை மேடையில் வந்து பார்க்கின்றபொழுதுதான் பல்வேறு கோரிக்கைகள் வந்தன. இவ்வளவு கோரிக்கைகள் திரைப்படத் துறைக்கு இருக்கின்றது என்று நான் இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன். இருந்தாலும், முதன்முதலாக இந்தத் திரைப்படத் துறையால் நடத்துகின்ற விழாவில் பங்கு பெற்றிருக்கின்ற நிகழ்ச்சியின் காரணமாக, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா பெயரிலே அமைக்கப்படுகின்ற **அந்த அரங்கிற்கு அம்மாவினுடைய அரசு, அவர் கேட்ட 5 கோடி ரூபாய் நிதியை வழங்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

அதுமட்டுமல்ல, பேசுகின்றபொழுது ஏற்கனவே, பலமுறை திரைப்பட நடிகர்களும் சரி, இயக்குநர்களும் சரி, இங்கே இருக்கின்ற சம்மேளனத்தைச் சேர்ந்த நிர்வாகிகளும் என்னை சந்திக்கின்ற பொழுதெல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றீர்கள். அதை துறையினுடைய அமைச்சருடன் கலந்துபேசி, படிப்படியாக உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தரும் . ஆகவே, இருபெரும் தலைவர்கள் திரைப்படத்தில் இருந்து வந்தவர்கள். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்களும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவும் திரைப்படத் துறையிலிருந்து வந்து 26 ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சி தந்த இருபெரும் தலைவர்களுடைய நிலையிலே, நீங்கள் வைக்கின்ற கோரிக்கைளை கனிவோடு பரிசீலித்து அம்மாவினுடைய அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த சம்மேளனத் தலைவர் மரியாதைக்குரிய திரு செல்வமணி அவர்களுக்கும், அவரைச் சார்ந்த அத்தனை பிரிவு நிர்வாகிகளுக்கும், வருகை தந்திருக்கின்ற அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**